**பாராளுமன்றக் கூட்டத்தொடர் 76**
**வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**

எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர்

இலங்கைப் பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை

| தொடர் இலக்கம் | குழு மூலம் கலந்துரையாடப்பட்ட பலவீனங்கள் மற்றும் பெற்றுக் கொடுக்கப்பட்ட கட்டளைகள் | குழு மூலம் கலந்துரையாடப்பட்ட பலவீனங்கள் மற்றும் பெற்றுக் கொடுக்கப்பட்ட கட்டளைகளை நடைமுறைப் படுத்திய பரிந்துரைகள் மற்றும் நிகழ்கால நிலைமைகள் |
|---|---|---|
| 01 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நோக்கு ,செயற்பணி மற்றும் பிரதான செயற்பாடுகள் | **நோக்கு-**<br><br>சர்வதேசத்தொழில் சந்தைக்குப் பயிற்றப்பட்ட மனித வளத்தினை வழங்குவதற்கான பிராந்திய தலைமையகமாக இலங்கையை உருவாக்குதல்.<br><br>**செயற்பணி-**<br><br>சர்வதேசத்தொழில் சந்தைக்குப் பயிற்றப்பட்ட மனிதவளத்தினை வழங்குதலை மேம்படுத்தல் மற்றும் புலம்பெயர் ஊழியர்களின் குடும்பத்தின் நலன்புரி நடவடிக்கைகளை நோக்காக கொண்டு பொருத்தமான கொள்கை வகுப்புக்கள் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சகல பிரிவினரதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுதல். |
| 02 | மத்திய கிழக்கில் பாதுகாப்பான இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கையரின் தொகை பாரியளவாக அதிகரித்துள்ளமை | பாதுகாப்பான இல்லங்களில் இதுவரையில் தங்கியுள்ள புலம்பெயர் தொழிலாளர்களின் தொகை குறைந்துள்ளதுடன் தூதரகங்களின் ஊடாக அவர்களின் துன்பங்களுக்காக துரித தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து மீண்டும் இலங்கைக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கைகள எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.<br><br>இதனை உறுதிப்படுத்துவதற்காக எண்ணிக்கையிலாக விபரங்கள் இத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளன.<br><br>2017ஆம் ஆண்டு பாதுகாப்பான இல்லங்களுக்கு அறிக்கையிட்ட புலம்பெயர் ஊழியர்களின் எண்ணிக்கை 2423.<br><br>2018ஆம் ஆண்டு பாதுகாப்பான இல்லங்களுக்கு அறிக்கையிட்ட புலம்பெயர் |

| | | |
|---|---|---|
| | | ஊழியர்களின் எண்ணிக்கை 2383<br><br>2019.01.01ஆம் திகதி முதல் 2019.05.13 ஆம் திகதி வரை பாதுகாப்பான இல்லங்களுக்கு அறிக்கையிட்ட புலம்பெயர் ஊழியர்களின் எண்ணிக்கை 940<br><br>யாதுமோர் வீட்டில் ஒரு பெண் புலம்பெயர் ஊழியருக்கு அதிக காலப்பகுதியில் பாதுகாப்பான இல்லத்தில் தங்கி இருக்க வேண்டிய நிலை ஏற்படுவது. அவருக்கு எதிராக அந்நாட்டு நீதிமன்றத்தில் நடைமுறைப்படுத்தி இருக்கும் வழக்கிற்கு பங்குபற்றுதல் அத்தியவசியமாக காணப்படுதல் மற்றும் அவருக்கு எதிராக பயணத்தடை (Travel Ban) விதிக்கப்பட்டிருப்பதால் ஆகும். |
| 03 | வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியத்தின் மற்றும் அமைச்சுக்கு தினந்தோறும் பெற்றுக் கொள்ளப்படும் முறைப்பாடுகள்/ மேன்முறைப்பாடுகள் அதிக எண்ணிக்கையினை காட்டுதல். | பணியகத்திற்கு தினந்தோறும் கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றவுடன் முறைப்பாட்டு முகாமைத்துவ தளத்தில் (CMS) சகல விபரங்களும் உள்ளடக்கப்படும்.<br><br>அந்த விபரங்களை முறைப்பாட்டு முகாமைத்துவ தளத்தில் உள்ளடக்கியவுடன் குறித்த தூதரகங்களுக்கு, தொழில் முகவர் நிறுவனங்களுக்கு மற்றும் பணியகத்தின் குறித்த அதிகாரிகளுக்கு பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன் குறித்த பகுதியினர் மூலம் அம் முறைப்பாடுகளுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந்த செயன்முறை அந்த தளத்திற்கு இற்றைப் படுத்தப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>அதன்படி குறித்த பகுதியினர் மூலம் எடுக்கப்படும் நடவடிக்கையின் படி பணியகத்தின் சமரசப்பிரிவின் மூலம் தீர்வு வரை நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>கணனித் தரவுத்தளத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட 2018 ஆம் வருடத்திற்கு அமைவான முறைப்பாடு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.<br><br>(இணைப்பு 01 மற்றும் 02) பார்க்கவும் |
| 04 | ஒரு வருடத்தில் இலங்கையில் தடை செய்யப்படும் தனியார் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் தடை செய்யப்படும் அடிப்படை | தடை செய்யப்படுதல் எனும் நடவடிக்கையில் பணியகத்தின் சட்டமூலத்தில் இச்சொல் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன் ஒதுக்கீடும் இல்லை. இருப்பினும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் பணியகத்தின் சட்ட மூலத்தின் 39 ஆவது அத்தியாயத்தில் ஒதுக்கீடுகளின் அடிப்படையில் அனுமதி மறுக்கப்பட்டதுடன் அவை காட்சிப்படுத்தப்பட்டது Black list/Suspension என்பவற்றின் கீழாகும்.<br><br>உரிமைப்பத்திரத்தினைத் தடை செய்வதற்கு பணிகத்தின் சட்ட மூலத்தின் 31 ஆம் |

பிரிவில் ஒதுக்கீடுகள் காணப்படுகின்றன. தடை செய்யப்பட்ட உரிமைப்பத்திரங்களை மீண்டும் செயற்படுத்தக் காணப்படும் ஒரே மார்க்கம் 31 ஆம் பகுதியான அமைச்சின் செயலாளரின் முடிவின் அடிப்படையிலாகும். அவ்வாறு செயற்படுத்துவதற்கு முடியாதாயின் அந்த உரிமைப் பத்திரத்தினைப் பிரயோசனப்படுத்த முடியாமல் போகும்.

பணியகத்தின் தலைவரின் சுற்றறிக்கையின் அடிப்படையில் மனித வயாபாரத்திற்கு குற்றவாளியாகிய உரிமைப்பத்திரதாரி அல்லது நிறுவனத்தின் நிருவாகக் குழுவினர் அல்லது உரிமைப்பத்திரதாரியின் குடும்ப அங்கத்தவருக்கு உரிமைப்பத்திரத்தினை கோருவதற்கு பொருத்தமற்றவர்கள் என்று சகல உரிமைப்பத்திரதாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**<u>சமரசப் பிரிவு (Conciliation Branch)</u>**

முறைப்பாடுகளைத் தீர்வு செய்யும் நடவடிக்கையின் போது பணியகத்தின் சட்ட மூலத்தில் 44 (1) அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முறைப்பாட்டு பரிசீலனை ஒன்றினை நடாத்துதல், கட்டளைகளை வழங்குதல் மற்றும் சட்ட ரீதியான கடிதங்கள் மூலம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த இடர்களை தீர்வு செய்வதற்கு தொழில் முகவர் நிறுவனங்கள் பின்வாங்குமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களின் அந்த தேசிய தொழில் நிறுவனம் அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் இடர்களை தீர்க்கும் வரை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
பணியகத்தின் சட்ட மூலத்தில் ஒதுக்கீடுகளின் அடிப்படையில் அந்த இடர்களை தீர்வு செய்வதற்காக பணியகத்திற்கு தொழில் முகவர் நிறுவனஙகளுக்கு கட்டளை இடும் அதிகாரம் உண்டு என்பதுடன் அவ்வாறு கட்டளை இட்ட பின்னர் நடவடிக்கை எடுக்கப்படவில்லை ஆயின் அந்த வெளிநாட்டு முகவர் நிலையத்திற்கு எதிராக வழக்கு பதிவு செய்ய முடியும்.
விசேட விசாரணைப் பிரிவு

1. முறைப்பாடு சம்பந்தமாக மேற் கொள்ளப்படும் விசாரணைகளுக்கு சமூகமளிக்காமை காரணமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் உரிமைப்பத்திரம் தடை செய்யப்பட்டுள்ளது.

2. வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் சட்ட மூலத்திற்கு மாறாகச் செயற்படுதல்( பணியகத்தின் பதிவு செய்யாமல் வெளிநாடு செல்லுதல், அனுமதியளிக்கப்பட்ட தொழில் இல்லா திருத்தல். அனுமதியளிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக அறவிடுதல்) காரணமாக விசாரணை நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு தற்காலிகமாக வெளிநாட்டு

| | | |
|---|---|---|
| | | வேலைவாய்ப்பு நிறுவனங்களை தடை செய்தல்<br><br>**<u>அனுமதிக்கும் பிரிவு</u>**<br><br>வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறவனங்களைத் தடை செய்தல் அனுமதி யளிக்கும் பிரிவில் மேற்கொள்ளப் படுவதில்லை. இருப்பினும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக ஏதேனும் பிரச்சனை ஏற்படும் சந்தர்ப்பத்தில் தொழில் முகவர் நிறுவனங்களின் அனுமதியினை தடை செய்தல் மாத்திரம் இந்நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>**நியாயப்படுத்துதல்-**<br><br>1. தேசியத் தொழில் நிறுவனங்கள் ஊடாக வெளிநாடு சென்றுள்ள புலம்பெயர் ஊழியர்களினால் பணியகத்திற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக.சமாதானப்படுத்தல் பிரிவு மூலம் விசாரணை நடாத்தப்பட்டதன் பின்னர் அந்த முறைப்பாடுகளை தீர்வு செய்யும் முகமாக நேரடியாக சம்பந்த மளிப்பது தேசிய தொழில் முகவர் நிறுவனம் என்று சமரசப் பிரிவு உத்தியோகத்தர் மூலம் குறித்த தொழில் நிருவனத்திற்கு கட்டளை இட்டதன் பின்னர், அந்த இடர்களை நிவர்த்தி செய்வதற்கு தொழில் முகவர் நிலையத்தின் மூலம் பணியகத்திற்கு கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் அந்த முறைப்பாடுகளை தீர்வு செய்வதற்காக தேசிய தொழில் நிறுவனத்தின் முழுமையாக ஒத்துழைப்பினை பெற்றுக் கொடுப்பதற்கு உற்சாகப்படுத்துவதற்குக் குறித்த தொழில் முகவர் நிலையங்களை தற்காலிகமாகத் தடை செய்வதுடன் குறித்த இடர் தொடர்பாக பொருத்தமாக நடவடிக்கைகளை எடுத்த பின்னர் தடையினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>2. வெளிநாடு செல்ல உத்தேசிக்கும் பெண்களை பணியகத்தில் பதிவு செய்து கொள்ளாது முறையற்ற விதத்தில் வெளிநாடு அனுப்புதல், ஊழியர்கள் வெளிநாடு செல்வதற்கு தேவையான படிவங்களை முறையற்ற விதத்தில் தயார் செய்து பணியகத்திற்கு சமர்ப்பித்தல் வெளிநாடு செல்ல உத்தேசிக்கும் பெண்களுக்கு பணமோசடி செய்தல் ஆகிய முறைப்பாடுகள் தொடர்பாக பணியகத்தின் சட்டப்பிரிவு மற்றும் விசேட விசாரணைப் பிரிவு மூலம் மேற்கொள்ளப்படும் விசாரனைகள் மூலம் பல்வேறு மோசடிகள் தொடர்பாக குறித்த தொழில் நிறுவனங்களின் நேரடி தொடர்பு இருக்கின்றது என்று விசாரணை அதிகாரிகள் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் (நீதிமன்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை ப்பாடுகளைத் தவிர) அந்த தொழில் நிறுவனங்களின் அனுமதியினை தற்காலிகமாக தடை செய்வதுடன் குறித்த இடர் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்த பின்னர் |

| | | |
|---|---|---|
| | | தடை நீக்கப்படும்.<br><br>3. வெளிநாடுகளில் காணப்படும் முகவர் நிலையங்களில் தரகுப் பணத்தினை பெற்றுக் கொண்டு ஊழியர்களை அந்நாட்டுக்கு அனுப்பிவைக்கவில்லை என்று அந்நாடுகளின் முகவர் நிலையங்கள் மூலம் தூதரகங்களுக்கு அல்லது நேரடியாக பணியத்திற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணையின் பின்னர் அது சம்பந்தமாக தேசிய தொழில் முகவர் நிலையம் குற்றம் சாட்டப்பட்டால் குறித்த முகவர் நிலையங்களின் அனுமதி தற்காலிகமாக தடை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் இடர்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதன் பின்னர் தடை நீக்கப்படும்.<br><br>இதன்படி சமரசப்பிரிவு, விசேட விசாரணை ப்பிரிவு அனுமதிக்கும் பிரிவு மூலம் பிரிவுகளின் அலுவலக கடமைகளை மேற்கொள்ளும் போது மேற்குறிப்பிட்ட நியாயப்படுத்தல்களுக்கு அமைய கடந்த 08 வருட காலப்பகுதிக்குள் அனுமதி மறுக்கப்பட்ட எண்ணிக்கைகள் பின்வருமாறு<br><br>2012 - 140<br>2013 - 223<br>2014 - 186<br>2015 - 180<br>2016 - 61<br>2017 - 116<br>2018 - 89<br>2019 - 44 (மே மாதம் 15 வரையில்) |
| 05 | அமைச்சின் மூலம் செயற்பாட்டுக் குத்தகை செயன்முறையின் கீழ் டபில் கெப் வாகனங்கள் 05 இனை கொள்வனவு செய்து 10 மாத வாடகையாக 2017 ஆம் வருடத்தில் ரூபா. 7,956,850.00 செலுத்தப்பட்டுள்ளது. | மேன்மை தங்கிய பிரதி அமைச்சரின் அலுவலக பதவியணியினரின் பாவனைக்காக அவரின் கோரிக்கையின் அடிப்படையில் செயற்பாட்டு குத்தகைக்கு டிபில் கெப் வாகனங்கள் 05 பெற்றுக்கொள்ளப்பட்டது.இனி வரும் காலத்தில் செயலாளர் தலைமையில் குழு மூலம் வாகன தேவை தொடர்பாக கலந்தாலோசித்து திறைசேரியின் அனுமதியினைப் பெற்று நடவடிக்கை எடுத்தல்.<br><br>பிரதி அமைச்சரின் பதவி செயலற்றுப் போனதால் இந்த வாகனம் மேலதிகமானது என்று ஜனாதிபதி செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு புதிய வாகனங்களை |

| | | |
|---|---|---|
| | | கொள்வனவு செய்யும் தேவை இருப்பதனால் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு உரிய வழங்குனர் உடன் எதிர்கால ஒப்பந்த காலம் தொடர்பாக ஓர் ஒப்பந்ததிற்கு வருவதற்காக இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் தலைவர் மூலம் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக இனிவரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. |
| 06 | இந்த வேலைத்திட்டத்தின் 2014 இல் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது படிமுறைக்கு சுவிட்ஸ்சர்லாந்து அரசாங்கத்திடம் இருந்து ரூபா.3,875,000 நன்கொடை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக கிடைக்கப்பெற வேண்டி இருப்பினும் தற்போது அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக அன்றி சர்வதேச தொழிலாளர் அமைப்புக்களின் ஊடாக கிடைக்கப்பெறுவது குறித்து குழுவானது தமது கவனத்தை செலுத்தியது. இது பல படிமுறைகள் ஊடாக முன்னெடுக்கப்படுவதுடன் முதலாவது படிமுறையில் அமைச்சின் ஊடாக அன்றி சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கள் ஊடாக நேரடியாக நிதி வழங்கப்பட்டுள்ளது எனவும் இரண்டாவது படிமுறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திடுவதற்காக அமைச்சரவை நிரூபம் ஒன்றினை முன்வைக்கையில் அங்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக நிதி வழங்கப்பட வேண்டும் என தெளிவாக குறிப்பிட்டுள்ள போதிலும் ஒப்பந்தத்தில் அந்த நிபந்தனை நீக்கப்பட்டுள்ளமை காரணமாக மீண்டும் முன்னர் போன்று நேரடியாக நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பி.க.உ தெரிவித்தார். ஏவ்வாறாயினும் இதன் பௌதீக மற்றும் நிதித்தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்பட்டு இச்செயல்முறையானது அமைச்சின் கருத்திட்ட ஆலோசனை குழுவினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பி.க.உ மேலும் தெரிவித்தார். இது தொடர்பாக அமைச்சரவைக்கு அறிவிக்குமாறு குழுவானது | இது சம்பந்தமாக அமைச்சருக்கு அறிவித்து அமைச்சரவை குறிப்பு ஒன்றினை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி அமைச்சரவைக் குறிப்பு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் கண்காணிப்புடன் கூடிய 2019 பெப்ரவரி 13 ஆம் திகதிய இலக்கம் 19/0297/130/008 அமைச்சரவையின் தீரமானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சரவை குறிப்பு மற்றும் தீர்மானங்களின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.<br><br>தயவு செய்து **இணைப்பு 03** இனை பார்க்கவும் |

| | | |
|---|---|---|
| | பி.க.உ. இற்கு பணிப்புரை விடுத்தது. | |
| 07 | 2016 நவம்பர் 09 ஆம் திகதிய அபம/ 16/2048/741/011 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரசின் துரித நிவாரண வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்க வேண்டிய புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் தொடர்பான சட்டம்.<br><br>இது அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டு 2018 ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதியிலும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் காணப்படுதல் மற்றும் இதன் பௌதீக மற்றும் நிதித்தேர்ச்சி | தயவு செய்து **இணைப்பு 04** இனை பார்க்கவும் |
| 08 | இது தொடர்பாக ஆரம்ப கட்டத்தில் தேவையான ஆரம்ப கட்ட மதிப்பீடுகளை மேற்கொள்வதிலான பலவீனங்கள் தொடர்பில் குழுவானது தனது அதிருப்தியினை தெரிவித்தது.இதற்கு போதுமான நிதி கிடைக்கப்பெறவில்லை எனவும் இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர் இந்த தரவு முறைமையை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் பி.க.உ தெரிவித்தார். | புலம்பெயர் ஊழியர்கள் தொடர்பான குடும்பக் கட்டமைப்பினை உறுவாக்குவதற்குத் தேவையான தரவுகளை கணனி மயப்படுத்தி கணனித்தரவுத்தளத்தினை உறுவாக்குவதற்கு சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நிதி உதவியுடன் கனணித் தரவுத்தளத்தினை உருவாக்குவதற்கு நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த நிறுவன உத்தியோகத்தர்கள் மூலம் குறித்த உத்தியோகத்தர்களுடன் பல்வேறுபட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளதுடன் இந்த வருடத்தின் செப்டெம்பர் மாதமளவில் அந்நிறுவனத்தின் மூலம் கணனித் தரவுத்தளத்தினை பெற்றுக் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 09 | 2012 ஆம் ஆண்டு அரசாங்க மதிப்பீட்டாளரினால் ரூபா.2,800,000 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த அரச நிதித் திணைக்களத்தின் அங்கீகாரமும் கிடைக்கப பெற்றிருந்த அமைச்சுக்கு சொந்தமான வாகனங்கள் 2014 ஆம் ஆண்டு வரையில் நீட்டிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் மீண்டும் உள்ளக் குழுவினால் ரூபா.400,000.00 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 1,274,900 இற்கு விற்பனை செய்யப்பட்ட போதிலும் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் இன்மையால் வாடிக்கையாளரின் பணம் மீண்டும் செலுத்தப்பட்டுள்ளது.பின்னர் நீக்கல் | 2012 ஆம் வருடத்தில் அரசாங்க மதிப்பீட்டாளரின் அறிக்கை 2018 ஆம் ஆண்டளவில் காலாவதியாகி இருப்பதுடன் 2014 ஆம் ஆண்டுக்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வாகன மதிப்பீட்டாளர் குழுவின் அறிக்கைக்கு அமைய மதிப்பீடு அடிப்படையாக கொண்டு 2018 ஜீலை 20 ஆம் திகதிக்கு மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் கூடிய பெறுமதியாகிய ரூபா.1,365,367/- க்கு திறந்த விலை மனுக் கோரல் மூலம் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.<br><br>இங்கு அமைச்சு அதிகாரிகள் மட்டத்தில் எந்த விதமான நிதி மோசடியும் மேற்கொள்ளப்பட வில்லை. இருப்பினும் இது சம்பந்தமாக அமைச்சு மட்டத்திலான விசாரணை நடைபெற்று அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது.<br>அது தொடர்பாக செயலாளர்களை அறிவுறுத்துவதற்காகவும் அது சம்பந்தமான அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காகவும் அனுமதி பெறுவதற்கான கோவை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>இது சம்பந்தமாக அரச கணக்குக் குழுவின் ஆலோசனைக்கு அமைய நிதி மோசடி |

| | | |
|---|---|---|
| | செயல்முறையானது முறையற்றதாக மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் இதற்காக பத்திரிகை விளம்பரங்களுக்காக இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 170,526 செலவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் மற்றும் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெற்று 2018 ஜீலை மாதம் 20 ஆம் திகதி ரூபா1,365,367 இற்கு விற்பனை செய்தல். | ஏற்பட்டுள்ளதா என்று கண்டறிவதற்கு விசாரணை ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கைக்கு அமைய அதற்கு தொடர்புடைய நபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சின் செயலாளரின் அனுமதி கிடைக்கப்பெற்றிருப்பதுடன் அது சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பினும் அது அவர்களின் கடமை இல்லை என்றும் அது சம்பந்தமாக கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கு அமைய கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. தயவு செய்து **இணைப்பு 06** இனை பார்க்கவும். |

கௌரவ அமைச்சர் அவர்களே,

பரிந்துரை செய்து கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

**டப்லிவ்.ஏ.சூலாநந்த பெரேரா**

செயலாளர்

**ஹரின் பெர்னாந்து ( பா.உ)**

தொலைத்தொடர்பு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்